தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

துணர் 49

இராட்சச ஆண்டு

1975 – 76.

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சை.

பொழிற்றொண்டர்

திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ.,

உள்ளுறை

இராட்சச ஆண்டு — மலர்கள் க - யஉ

துணர் 49 — பக்கம்

1 அகத்திணை மரபுகள் — 197
திரு. இராம. சுப்பிரமணியன், எம் ஏ., பிஜி எல்.

2 அடியார்க்கு நல்லார் உரைநுட்பம் — 281
திரு ந. மு. கோவிந்தராய நாட்டார், பி.ஏ எல் டி.

3 அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கருத்தரங்கு — 26. 234

4 அரவமெனத் தமிழை அழைப்பதேன் — 71
பேராசிரியர் திரு. கோ. தெய்வநாயகம்,
எம். ஏ., பி. எசி,

5 ஆட்டன் அத்தி - ஓராய்வு — 321
பேராசிரியர் திரு. கோ. தெய்வநாயகம்,
எம். ஏ, பி. எசி.;

6 இளங்கோ காணும் ஊழ் — 13
பேராசிரியர் கொண்டல் சு. மகாதேவன்,
பி. எசி., எம் ஏ.

7 இளங்கோவடிகள் தமிழ்க் கழகத் தொடக்கவிழா — 166

8 இராதாகிருட்டின மாணவியர் செயற் கழகத் தொடக்கவிழா — 223

9 உமாமகேசுவர உலகச் செயற் கழகத் தொடக்கவிழா — 222
தலைவர் பொறுப்பு ஏற்பு விழா

10 கவிமணியின் பாடல்களில் இயற்கை — 309
பேராசிரியர் திருமதி தரணிபாசுகர், எம். ஏ..

11 கலைமகள் விழா — 221

12 குயில் தந்த முத்தம் — 288
திரு. அ ஆறுமுகம், எம். ஏ.. பி. டி.,

13 குறளில் விட்டியல் — 215, 246, 268
திரு. க. சோமசுந்தரம், பி. ஏ, பி. எல்.

14 கையறவு — 25, 140, 168, 224, 251

15 சங்க கால இராமாயண ஓவியங்கள் — 238
திரு ஏ. ஏகாம்பரநாதன், எம் ஏ.

16 சமயக் காழ்ப்பு — 253
திரு. ஏ. ஏகாம்பரநாதன், எம். ஏ.

17 சிலப்பதிகார மீயியற்கைச் செய்திகள் 21
திரு. ஆபிரகாம் அருளப்பன்

18 சிலம்பு புலம்புகிறது 159, 188, 209, 248, 264, 305
பேராசிரியர்- திரு கோ. தெய்வநாயகம்,
எம். ஏ., பி. எசி,

19 செந்தமிழ்த் திறம் 1
திரு. ந. மு கோவிந்தராய நாட்டார்,
பி. ஏ, எல். டி.

20 சைவமும் - வைணவமும் 113
,, ,,

21 தமிழில் உடனிகழ்ச்சி வேற்றுமை 148
டாக்டர் திருமதி க. புட்பவல்லி, எம் ஏ பி. எச்டி

22 தமிழில் தாவரம் 49
டாக்டர் கு சீநிவாசன்

23 தமிழ் இலக்கிய மரபுகள் 57
இராம. சுப்பிரமணியம்,
எம், ஏ., பி. ஜி. எல்., பி. லிப். எசி.

24 தமிழ் நூற் குறியீட்டு விளக்கம் 16
பாவலர் திரு. ச. பாலசுந்தரம்

25 தமிழ்ப்பண்பாட்டுப் பெருவிழா ஏற்பாடுகள் தீவிரம் 135
டாக்டர் சாலை இளந்திரையன்

26 தமிழ்ப்பேராசிரியர் - மணிவிழா 196

27 திருக்குறளிலும், தொல்காப்பியத்திலும் அறம் பொருள் இன்பம் 100
வைப்புமுறை-கவிஞர் கு எழிலரசு, பி. எசி. எம் ஏ.

28 திருக்குறளில் அறஉவமைகள் 66
கவிஞர் கு. எழிலரசு. பி. எசி, எம். ஏ.

29 தென்னக மேதையும் சினந்துச் செம்மலும் 155, 176, 203, 240
திரு சி இராமகிருட்டினன், பி ஏ., பி எல்.

30 தொட்டில் இலக்கியம் 40
திரு எஸ் ஆரோக்கியநாதன், எம் ஏ.

31 பேராசிரியர், கா. நமச்சிவாயர்
சிறுவை மோகனசுந்தரம்

32 நம் தாய்த் தமிழ் மக்காள் நீ! 65
புலவர் திரு. அ. வைத்திலிங்கம்

33 நற் செயல்கள் 124
,, ,,

34 நாரண துரைக்கண்ணனார் முத்துவிழா 139

35 நெஞ்சறிவுறூஉ 141

திரு ந. மு. கோவிந்தராய நாட்டார், பி. ஏ., எல். டி.

36 பள்ளு - ஒரு பாமரர் இலக்கியமே 270

திரு. க சண்முகசுந்தரம், எம். ஏ.

37 பாடல்கள் பாடுகிறேன் 233

புலவர். திரு. அ. வைத்திலிங்கம்

38 பாரதிதாசனாரின் குழந்தைப் பாடல்கள் 77, 106

திரு. இ சுந்தரமூர்த்தி

39 பாரதிதாசனின் கதர் இராட்டினப் பாட்டு 225

திரு இரா. இளவரசு, எம். ஏ. பி எச்டி.

40 பாரதிதாசனின் படைப்புகள் பற்றி 295

திரு. இரா. இளவரசு, எம். ஏ., பி. எச்டி

41 பாரதிதாசனின் புரட்சி உள்ளம் 29

திரு. இராம. சுப்பிரமணியன், எம் ஏ. பி. ஜி. எல்.

42 பாராட்டுரை 231

(துணைவேந்தர் டாக்டர் மால்கம் ஆதிசேஷையா)

43 பாவேந்தரின் குறளோவியங்கள் 126

திரு. இராம சுப்பிரமணியன், எம். ஏ. பி. ஜி. எல்.

44 பாவேந்தரின் வரலாற்று பற்றி 258

திரு இரா. இளவரசு. எம். ஏ பி எச்டி.

45 புகுமுக வழிப்புலவர் மாநிலத் தமிழ்க் கழகம் 218

46 புரட்சி கவிஞர் வரலாறு 335

டாக்டர். சாலை இளந்திரையன்

47 பெரியார் — அண்ணா பிறந்த நாள் விழா 167

48 மணி விழா 138

(பண்ணாராய்ச்சிவித்தகர் குடந்தை ப சுந்தரேசனார்)

49 மண்ணில் வளையாத செங்கோல் வளைந்தது 85

திரு. சி இராமகிருட்டினன். பி ஏ., பி. எல்

50 மெய்மொழி 180

திரு எஸ். ஆரோக்கியநாதன். எம் ஏ

51 வினையடைப் பெயர்கள் 169

டாக்டர். மோ. இசரயேல்

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௦௦௬	மலர்
௪௯	ராக்ஷஸ, சித்திரை	க
	(1975 — ஏப்ரல் — மே)	

செந்தமிழ்த் திறம்

கோவிந்தராய நாட்டார்,

331 - I அவின்யூ, இந்திரா நகர், சென்னை - 600020.

'செந்தமிழ்த் திறம்' என்னும் சொற்றொடர் சுந்தரர் தேவாரத்தின் ஒரு பாடலில் பயின்றுள்ளது. பொருட்செறிவுள்ள தொடராகலின் இதனையே தலைப்பாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகின்றது திறம் என்ற சொல் தன்மை அல்லது பண்பு, திறமை அல்லது வலிமை எனப் பொருள்படும். இச்சொல்லுக்கு வேறு பல பொருள்களும் உள. எனினும் மேற்குறித்த இரண்டினைப் பற்றியே இக்கட்டுரை எழுதப் பெறுகின்றது. பண்பு என்ற தலைப்பில், தமிழ் என்ற சொல்லின் பொருளாகிய இனிமை பயக்கும் சொற்களையும் தொடர்களையும் பற்றியும். திறமை என்ற தலைப்பில் தமிழாட்சியால் இறையருள் பெற்ற பெரியார் செயற்கரிய செய்த திறத்தினைப் பற்றியும் இதன்கண் விளக்கப்பெறும்.

'இனிமையும் நேர்மையும் தமிழெனலாகும்' என நிகண்டு கூறும் சிந்தாமணியில் வரும் 'தமிழ் தழீஇய சாயலவர்' என்பது தமிழைப் போன்ற இனிமையான அல்லது மெல்லியற் சாயலுடைய மகளிர் எனப்பொருள் பெறும் கம்பன் காப்பியத்தில் 'குழல் வண்டு தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே;' 'தமிழ் நிகர் நறவம் மாந்தி' என்ற சொற்றொடர்கள் பயின்றுள்ளன. வண்டுகளுக்கு மொழி தெரியாதாகையின் தமிழ்ப் பாட்டு என்பது இனிமையான பாட்டு எனவே பொருள் தரும். இரண்டாம் சொற்றொடர் நறவம் நிகர் தமிழென்னாது தமிழ் நிகர்நறவம் என்று தமிழை உவமையாக்கிக் கூறுதலினால் தமி

ழின் இனிமை நறவத்தின் இனிமையின் மிக்கது என்பதனைப் புலப்படுத்துகின்றது. தமிழ் என்ற சொல்லுக்கு ஒப்பிலா இனிமை பயப்பது என எம் தமிழ் எழுத்தொலி நூலில் பொருள் கூறியுள்ளோம். தமி என்னும் பகுதிக்கு ஒப்பின்மை என்னும் பொருள் உளதாகலின் இனிமை என்ற பொருள் பயப்பது 'ழ' என்னும் எழுத்தேயாம் எனவும் கூறியுள்ளோம். ழகர ஆராய்ச்சியைப் பற்றி ஒலி நூலில் கூறியிருப்பதனை பொருள் பொருத்தங்கருதி ஈண்டு எடுத்தெழுதுகின்றோம் :—

" இனி உலக மொழி வேறொன்றினும் காணப்படாத தனிச் சிறப்புடைய ழகரத்தைப் பற்றிச் சிறிது விளக்குவோம் : பிற மொழிகளில் காணப்படாததாயும், பிறமொழியாளரால் எளிதில் உச்சரிக்கக் கற்றுக்கொள்ளப் படாததாயும் உள்ள இவ்வெழுத்துத் தமிழ்க் குழந்தைகளால் எளிதில் உச்சரிக்கக் கூடியதாயும் தமிழ் மொழியில் பெருவழக்காய் பயின்று வருவதாயுமிருப்பது பெரிதும் இறும்பூதெய்விக்கின்றது மேற்கூறிய வாக்கியத்திலேயே ஏழு ழகரம் பயின்றுள்ளன. தமிழ், எழுத்து, மொழி, வழக்கு, சொற்பொழிவு முதலிய இலக்கியச் சார்பான சொற்களிலும் இவ்வெழுத்து பயில்கின்றது. ஐம்புல நுகர்ச்சிக்கும், ஆறுவது அறிவிற்கும் இனிமை பயக்கும் சொற்களில் ழகரம் பயில்வதனைக் காணலாம் :

கண் — அழகு, எழில், பொழில், குழந்தை.
செவி — குழல், யாழ், மழலை.
(குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளா தவர்)
வாய் — பழம், வாழைப்பழம், அமிழ்தம்
மூக்கு — தாழை, மகிழம்பூ கமழ்தல்
மெய் — தழுவு, நழுவு. உழைப்பு, வழவழப்பு
ஆறுவது அறிவு — புகழ், மகிழ், அழு, எழு, பிழை, விழை. தொழு, விழுமியது, தொழும்பு. கெழுதகை, உழுவலன்பு, கழிபேருவகை, விழுப்புண், கிழமை. தோழமை.

இன்னும் இத்தகைய எத்தனையோ சொற்கள் உள்ளன. ழகரம் பயின்றுள்ள பல சொற்களைச் சோதித்தால் இவற்றில் ஒன்றற்கொன்று மாறுன பொருளைத் தருகின்ற சொற்களும் உள்ளன என்பதனை அறிகின்றோம். மாறுபாட்டிற்குக் காரணம் ஒன்றன் முதிர்ச்சி அல்லது மிகுதிப் பாடாகத் தோன்றுகிறது ;

பழுத்தது — அழுகியது
மகிழ்ச்சி — அழுகை
புகழ் — இகழ்
வாழ்வு — தாழ்வு
காழ் — பாழ்
ஒழுக்கம் — இழுக்கம்

இவைபோன்ற இன்னும் பல சொற்கள் உள்ளன. பழம் அதிகமாகப் பழுத்தால் அழுகி விடுகின்றது. வரம்பு மீறிய மகிழ்ச்சியில் அழுகை ஏற்படுகின்றது. வரம்பு மீறிப் புகழ்ந்தால் இகழ்ச்சியாம், வரம்பு மீறி வாழ முற்படுகின்றவன் தாழ்வான்.

தொல்காப்பியச் செய்யுளியலில் தோல் என்ற வனப்பை விளக்கும்

இழுமென் மொழியான் விழுமியது நுவலினும்
பரந்த மொழியால் அடிநிமிர்ந் தொழுகினும்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்

என்ற நூற்பாவிலேயே ழகரம் மிகுந்து வருதலை நோக்குக. கீழ்க் காட்டப்பெற்ற செய்யுளில் ழகரம் மிகுதியாகப் பயின்று அச்செய்யுளின் ஓசைக்கு இனிமை பயப்பதைக் காண்க;

தொடுக்கும் கடவுள் பழம்பாடற் றொடையின் பயனே
நறைபழுத்த துறைதீந் தமிழின் ஒழுகும்நறுஞ்
சுவையே அகழ்ந்தைக் கிழங்கை அகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோ யிற்கேற்றும்
விளக்கே வளர்சிமைய இமையப் பொருப்பில்
விளையாடு மிளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங்கடந்து நின்ற ஒருவன்
திருவுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம் வாய்
மடுக்கும் குழற்காடேந்தும் இளவஞ்சிக் கொடியே
வருக வருகவே மலயத்துவசன் பெற்ற
பெரு வாழ்வே வருக வருகவே ''

(இத்துணையும் எமது ஒலி நூலிற்கண்டது)

இராமன், இலக்குவன், சீதை ஆகியோர் தமிழ் கற்றிருந்ததாக வால்மீகத்தில் காணப்படுகின்றதென அக்காப்பியம் உணர்ந்தோர் கூறுகின்றனர். கம்பரும் இராமனை

"தென்சொற்கடந்தான் வடசொற்கடற் கெல்லைதேர்ந்தான்" எனக் கூறியுள்ளார். இக்கருத்திற்கு அரண் செய்வது போன்றதோர் செய்தியும் வால்மீகத்திற் காணப்படுகின்றது: அநுமன் அசோகவனத்தில் சீதாப் பிராட்டியாரைக் கண்ட பிறகு அவருடன் எம்மொழியில் பேசுவது என ஆராய்ந்தானும். இராவணன் வடமொழியில் வல்லவனாகலின் தன்னை இராவணனே இன்னணம் மாறுவேடத்தில் வந்திருக்கின்றான் என பிராட்டியார் அஞ்சுவார் எனக்கருதி வடமொழியிற் பேசாமல் மதுரமுள்ள தென்னாட்டு மொழியிற் பேசினான் என்பதாம். இதனால் தெரியவருவதென்னெனில் வால்மீகி முனிவரும் தமிழின் இனிமையை உணர்ந்திருந்தார் என்பதாகும். இதனுடன் தமிழின் இனிமை பயக்குந் திறனய்வை நிறுத்தி, அதன் செயற்கரிய செய்யும் ஆற்றலை விளக்குவாம்.

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இவ்வியற் பெயருடன், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர் என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. தம்பிரான் தோழர் என்ற பெயர் வந்த காரணத்தை, சேக்கிழார் தடுத்தாட் கொண்ட புராணத்தில், 'தோழமையாக உனக்கு நம்மைத்தந்தனம்' என்று சிவபெருமான் சுந்தரருக்குக் கூறியதாகக் காட்டியுள்ளார். சேக்கிழார் கூறியுள்ள சுந்தரர் வரலாற்றிற்குச் சுந்தரர் தேவாரப் பதிகங்கள் அகச் சான்றுகளாக அமைந்துள்ளன. சிவபெருமான் தனக்குத் தோழமை அருளியமையைச் சுந்தரர் திருநள்ளாற்றுப் பதிகத்தில்

" தன்னைத் தோழமையருளித் தொண்டனேன் செய்த
துரிசுகள் பொறுக்கும் "

எனவும், திருவாரூர்ப் பதிகத்தில்,

" ஏழிசையா யிசைப்பயனா யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக்குடனாகி "

எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமான் சுந்தரரைத் தோழனாக மதித்து அவருடன் விளையாடல் புரிகிறார். சுந்தரரும் தோழமை உரிமையால் சிவபெருமானிடம், இரங்கல், எள்ளல், வேண்டல், புலத்தல், சினத்தல், வினாதல், கட்டளையிடல், ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றார்.

விரிவஞ்சி இவற்றிற் சிலவற்றை மாத்திரம் ஈண்டு எடுத்து விளக்குவாம்: தனக்கு ஏற்பாடாகி நடக்குந்தறுவாயிலிருந்த வைதிகத் திருமணத்தை இறைவன் தடுத்தாட் கொண்டதை திருக்கோலக்கா பதிகத்தில்

"அன்று வந்தெனை யகலிடத்தவர்முன் ஆளதாக வென்று
வணங்காட்டி-நின்றுவெண்ணெய் நல்லூர்மிசை யொளித்த"

எனவும திருநள்ளாற்றுப் பதிகத்தில்

"வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ ஆவணங்
காட்டி யடியனு வென்னை யாளது கொண்ட"

எனவும் குறிப்பிட்டுள்ளார். இறைவன் சுந்தரரை எப்பொழுதும் திருமணக் கோலத்துடன் இருக்க வேண்டுமென்று பணித்தமையால் திருநாகைக்காரோணப் பதிகத்தில்

"முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவை பூணத்தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்"

என தனக்கு அணிகலன்கள் முதலியன வேண்டும் என இறைவனுக்கு வேண்டுகோள்கள் விடுகின்றார். இத்தகைய வேண்டுகோள் ஒவ்வொரு பாடலிலும் தொடர்கின்றது.

செந்தமிழ்த் திறத்தால் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருமருகல். திங்களூர் ஆகிய தலங்களில் அரவுதீண்டி இறந்தோரை எழுப்பிய வரலாற்றினை அறிந்திருந்தமையாலும் தானும் இத்தகைய ஆற்றல் பெற்றிருந்தமையானும் திருப்பைஞ்ஞீலி பதிகத்தில்

"செந்தமிழ்த் திறம் வல்லீரோ செங்க ணரவமுன் கையிலாடவே" என இறைவனை எளனமாக விளிக்கின்றார். திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் திருமறைக்காட்டில் பன்னெடுங் காலமாக மூடப்பட்டிருந்த கோயிற் கதவை திறக்கவும் மூடவும் பாடிய பின்னர் இறைவன் திருநாவுக்கரசரை திருவாய்மூர் வரும்படியாகப் பணித்தார். அவ்வாறே அரசர் திருவாய்மூர் சென்றார். ஆனால் இறைவன் காட்சி கிடைக்கவில்லை அவ்வமயம் ஞானசம்பந்தரும் அங்கு வந்து சேர்ந்தார். உடனே அரசர் திருவாய்மூர் இறைவனைப் பாடி காட்சியருளுமாறு வேண்டினார். காட்சி கிடைத்தது. அப்பாசுரம் கீழ்வருமாறு:—

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித் தாருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மை திருவாய்மூர்
பிறைக்கொள் செஞ்சடையர் இவர் பித்தரே.

திருவாரூரில் பரவையை சுந்தரருக்குத் திருமணம் செய்வித்த பிறகு அவர் இல்லறம் நடத்துதற்கு வேண்டிய பொன், பொருள் முதலியவற்றை யெல்லாம் இறைவன் அளித்து வந்தார். சுந்தரர் திருப்பாச் சிலாச்சிராமம் என்னும் தலத்திற்குச் சென்று பொன் வேண்டியபோது இறைவன் அருளாமையால் இத்தலப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் "இவரலாதில்லையோ பிரானர்" எனப் புலந்து கூறியுள்ளார். இவ்வாறே திருப்புகலூரில் பொன் வேண்டியபோது இறைவன் அருளாமையால், கோயிலை விட்டு வெளியே சென்று மடத்தில் உறங்காமல் அடஞ்செய்து கோயிலில் திருப்பணிக்காக இருந்த செங்கற்களை தலையணையாக வைத்துக்கொண்டு உறங்கினர். காலையில் எழுந்தபோது அக்கற்கள் பொன்னுக மாறியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி மீதூரப் பெற்று "தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்" என்று தொடங்கும் அற்புதத் திருப்பதிகத்தினைப் பாடியருளினர். நகைச் சுவை மிகுந்துள்ள இப்பதிகத்தினை ஒவ்வொருவரும் படித்துப் பார்க்க வேண்டும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும். கீழ் மக்களைப் பாடாதீர்,

"எந்தைப் புகலூர் பாடுமின் புலவீர்காள்" எனப் புலவர்களை விளித்து வேண்டுகிறார். இவற்றில் சில அடிகளைக் கீழே தருகின்றோம் :

"மிடுக்கிலாதானை வீமனே விறல் விசயனே வில் லுக்கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரில்லை"

"நரைகள் போந்துமெய் தளர்ந்து மூத்துடல் நடுங்கிநிற்கு மிக்கிழவனை
வரைகள்போல்திர டோளனே யென்று வாழ்த்தினுங் கொடுப்பாரில்லை"

"வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப் பாவியை வழக்கில்லியை
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று பாடினுங் கொடுப்பாரில்லை"

திருவொற்றியூரில் சங்கிலியாருக்குக் கொடுத்த சூளுரையை மீறி சுந்தரர் அவ்வூரிலிருந்து நீங்கியபோது இறைவன் அவருடைய இரு கண்களையும் மறைப்பித்தார். இதனுல் சுந்தரர் உள்ளங்

கலங்கி பல பாடல்களில் முறையீடு செய்துள்ளார். இவற்றைப் படிப்போர் உள்ளமும் உருகும் என்பதில் ஐயமில்லை. முறையீட்டிற் சிலவற்றைக் கீழே காண்க.

திருவடமுல்லைவாயில்

"மூன்றுகண்ணுடையாயடி யேன்கண் கொள்வதே
கணக்குவழக்காகில்
ஊன்றுகோ லெனக்காவ தொன்றருளாய்"

"கழித்தலைப்பட்ட நாயதுபோல வொருவன் கோல்பற்றிக்
கறகற இழுக்கை ஒழித்துநீ யருளாயின செய்யாய்"

"அகத்திற் பெண்டுகள் நானொன்று சொன்னாலழையேல்
போகுருடா வெனத்தரியேன்"

திருவெண்பாக்கம் "உலகெலாம்

ஈன்றவனே வெண்கோயி லிங்கிருந்தா யோவென்ற
ஊன்றுவதோர் கோலருளியுளோம் போகீ றென்றானே"

திருவேகம்பத்தில் (காஞ்சிபுரம்) இறைவன் சுந்தரருக்கு ஒரு கண் பார்வையருளினார் இதனால் மகிழ்ச்சியடைந்த சுந்தரர் இவ்வூர்ப் பதிகத்தின் பாடல்கள் ஒவ்வொன்றின் ஈற்றடியிலும்

"கம்பனெம் மானைக்காணக் கண்ணடியேன் பெற்றவாறே"

என முடித்துள்ளார் திருவாரூர்ப் பதிக மொன்றின் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றடியிலும் கீழ்க் குறித்தவாறு இறைவனை ஏசிப்பாடி மற்றைக் கண் பார்வையினைப் பெறுகின்றார்:

"மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே"

சுந்தரருக்கு சேரமான் பெருமாள் நாயனார் கொடுத்த பொருள்களை ஏவலாளர் சுமந்து கொண்டு திருமுருகன் பூண்டிக்கு அண்மையில் வரும்போது இறைவன் கட்டளையினால் பூதங்கள் திருடர்களாகி வந்து ஏவலாளர்களை அடித்துப் பொருள்களைப் பறித்துச் சென்றன. அதுபோழ்து சுந்தரர் திருமுருகன் பூண்டிப் பதிகப் பாடல்களில் இறைவனை ஏசிப்பாடி பொருள்களைத் திரும்பப் பெறுகின்றார் பாடல்களில் ஒன்று கீழ்வருமாறு:

"வில்லைக்காட்டி வெருட்டி வேடுவர் விரவலாமை சொல்லிக்
கல்லினாலெறிந்திட்டு மோதியுங் கூறை கொள்ளுமிடம்

முல்லைத்தாது மணங்கமழ் முருகன் பூண்டி மாநகர்வாய்
எல்லைக்காப்ப தொன்றில்லையாகில் நீரெத்துக்கிங்
கிருந்தீரெம் பிரானீரே "

மைலாப்பூரில் சிவநேசன் செட்டியாரென்னும் சிவனடியார் அரவர தீண்டி இறந்துபோன தம் பெண் பூம்பாவையை எரியிட்டுத் தகனம் செய்த பின்னர் சடலத்தின் என்பையும் சாம்பரையும் ஒரு மட் குடத்தில் இட்டு வைத்திருந்தார்; தம் வேண்டுகோளின் படி திருஞானசம்பந்தர் அங்கு எழுந்தருளியபோது தம் பெண்ணின் வரலாற்றைக் கூறி மட்குடத்தைக் காட்டினர் ஞானபோனகர் பூம்பாவைப் பதிகம் என்ற அற்புதப் பதிகத்தைப் பாடி பழைய அழகிய உருவுடன் பூம்பாவை குடத்தை உடைத்துக்கொண்டு வெளிவரும்படியாகச் செய்தார் இதனிலும் அரிய செயலாகத் தோன்றுகின்றது சுந்தரர் முதலையுண்ட பாலனை அழைத்தமை. சுந்தரர் தம்பிரான் தோழரன்றோ; இறைவன் தம் தோழருக்கு எதைத்தான் செய்யார்?

பாலனை முதலையுண்டு சில ஆண்டுகள் கழிந்த பின்னர் இந் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. திருப்புக்கொளியூர் அவிநாசிப் பதிகத்தின் இரு பாடல்களைக் கீழே தருகின்றோம்:

"வழிபோவார் தம்மோடும் வந்துடன் கூடிய மாணிநீ
ஒழிவதழகோசொல் லாயரு ளோங்கு சடையானே
பொழிலாருஞ் சோலைப் புக்கொளி யூரிற்குளத்திடை
இழியாக் குளித்தமாணி யெனைக்கிறி செய்ததே"

"உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்
அரைக்கா டரவா ஆதியுமந்தமு மாயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவிநாசியே
கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே"

'புக்கொளியூர்க்குளத்தில் இறங்கிக்குளித்த பாலன் என்ன தவறு செய்தான்? அவன் இறப்பது சரியோ, அருள் நிறைந்த சடையை உடையவனே, சொல்க'
என்பது முதற் பாடலின் பொருள்.

'உரைகடந்து நிற்பவனே! அரையிலாடும் பாம்பைத் தரித்தவனே,
ஆதியும் அந்தமும் ஆகியவனே. புக்கொளியூர் அவிநாசியில்

இருப்பவனே, நீ காலனுக்குக்கட்டளை பிறப்பி ; அவன் முதலைக்குக்
கட்டளையிடட்டும், முதலை பிள்ளையை வெளிக் கொணரட்டும்'

என்பது இரண்டாம் பாடலின் பொருளாகும் இப்பாடலில் சுந்தரர் இறைவனுக்குக் கட்டளையிடுதலைக் காண்க. இவ்வற்புத நிகழ்ச்சியைப் பற்றி இராமலிங்க அடிகளார் ஆளுடைய நம்பியைப் பற்றி (சுந்தரர்) எழுதியுள்ள பதிகத்தின் ஒரு பாடலில் குறிப்பிடுகின்றார். அது பின்வருமாறு :

"இலைக்குள நீரமைத்ததனில் இடங்கருற அழைத்ததன்வாய்
தலைக்குதலை மதலையுயிர் தழைப்ப அழைத்தருளிய நின்
கலைக்கும் வடகலையின் முதற் கலைக்கும் உறுகணக்குயர் பொன்
மலைக்கும் அணுநிலைக்கும் ஒவ்வா வன்றொண்டப் பெருந்தகையே"

'வன்றொண்டப் பெருந்தகையே உன் கலைத்திறனுடன் வடமொழி வேதத்தின் கலைத்திறத்தை ஒப்பிட்டால் உன்கலை பொன்மலை போன்றது. வடமொழி வேதம் அணுவாகின்றது' என்பது இப்பாடலின் சுருங்கிய பொருளாகும்.

இதுகாறும் மேற்கூறிப்போந்த அரும்பெருஞ்செயல்கள் நிகழ்ந்திருக்கக் கூடுமா என இனியும் ஐயுறுவார்க்கு விடையிறுப்பாம் :

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம்என்ப — தொல்காப்பியம்.
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் — திருக்குறள்.

மேற்காட்டிய நூற்பா, குறட்பா ஆகிய இவை யிரண்டின் பொருளை ஆய்வாம் :

நூற்பாவிற்கு இளம்பூரணர் கூறியுள்ள பொருள் :

இது. மந்திர ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று

இதன் பொருள் — ' நிறைந்த மொழியையுடைய மாந்தர் தமதாணையாற் சொல்லப்பட்ட மறைந்த சொல் மந்திரமாவதென்றவாறு அது வல்லார் வாய்க் கேட்டுணர்க.
பேராசிரியர் உரை :

" தானே என்று பிரித்தான், இவை தமிழ் மந்திரம் என்றற்கும், பாட்டாகி, அங்கதம் எனப்படுவனவும் உள, அவை நீக்குதற்கும் என உணர்க"

குறட்பாவிற்கு — பரிமேலழகர் உரை :

" நிறைந்த மொழியினையுடைய துறந்தாரது பெருமையை நிலவுலகத்தின்கண் அவராணையாகச் சொல்லிய மந்திரங்களே கண்கூடாகக் காட்டும்."

' நிறைமொழியென்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களை பயந்தே விடும்மொழி, காட்டுதல் பயனான் உணர்த்துதல் "

இனி இவ்வுரைகளிலிருந்து புலப்படும் எமது முடிவை விளக்குவாம் இருபாக்களிலும் நிறைமொழி மாந்தர், மறைமொழி ஆகிய தொடர்கள் வந்துள்ளன வாகையால் இரண்டின் பொருளும் முரண்பாடின்றி ஒத்தே இருத்தல் வேண்டும் அது தான் மந்திரமென்பது இன்னது, இத்தகையதென்பது. நிறைந்தமொழி என்னும் சொற்றொடரை இளம்பூரணர் விளக்கவில்லை பரிமேலழகர் விளக்கியுள்ளார். மறைமொழி எனனும் சொற்றொடரை பரிமேலழகர் விளக்கவில்லை. இளம்பூரணர் மறைந்த சொல் மந்திரம் எனக்கூறி, அதனை வலலார் வாய்க் கேட்டுணர்க எனத் தமது ஆற்றாமையைப் புலப்படுத்தியுள்ளார் பேராசிரியர், ' தானே ' என்று பிரித்த சிறப்பால் இவை தமிழ் மந்திரம் ஆம் எனக் கூறியுள்ளார். இது நெல்லுக்குள் அரிசி இருக்கிறது என்பது போன்ற வெள்ளிய வுரையே தமிழ் இலக்கணத்தில் தமிழ் மந்திரங்களைப் பற்றிக் கூறாமல் ஆசிரியர் வடமொழி மந்திரங்களை ஒருக்காலும் கூறார். மொகஞ்சதாரோ காலத்து மக்கள் (தமிழ் மக்கள்) மந்திரம் யோகம் அறிந்திருந்தனர் எனத் தெரிதலால், தொல்காப்பியர் காலத்தும், அதற்கு முன்னரும் தமிழில் மந்திரங்களும் இருந்தன என்பது ஒருதலை.

'மந்திரம்' என்ற சொல்லை மேற்கூறிய உரையாசிரியர் மூவரும் சரியாக விளக்கவில்லையாதலின் எம் சிற்றறிவிற்குப் புலனாகும் ஒரு பொருளைக்கூறி மேற் செல்லுதும்.

" மறைந்த ஒழுக்கத் தோரையும் நாளுந்
துறந்த ஒழுக்கம் கிழவற்கில்லை"

என்பது தொல்காப்பியத்தின் களவியல் நூற்பா. மறைந்த ஒழுக்கமாவது களவொழுக்கம், அதாவது புறத்தார்க்குத் தெரியாத உள்ளொழுக்கம். அதே போன்று மந்திரமாவது சிற்றறிவினர்க்கு விளங்காத உட்பொதிந்த பொருளுடைய நிறைமொழி மாந்தர் ஆணைமொழி தேவார ஆசிரியர் நிறைமொழி மாந்தர் ஆகலின் அவர் ஆணையிற்கிளந்த மொழியும் மந்திரமாம்.

மங்கையர்க்கரசியார் அழைப்பின் பேரில் திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டிலிருந்து மதுரைக்கு எழுந்த காலை நாவரசர் 'நாளுங்கோளும்' சரியில்லையே எனத் தடுத்தார். அதுபோது 'கோளறு' பதிகத்தினைப் பாடி முடித்து அரசரிடம் விடை பெற்று ஞானபோனகர் அடியார்குழாம் புடைசூழ மதுரை நோக்கிப் புறப்பட்டார். இப்பதிகத்தின் திருக்கடைக்காப்புப் பாடல்

"மறைஞான ஞான முனிவன் தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய் ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே" என முடிகின்றது. மதுரை அடைந்த சம்பந்தர் அடியார்களுடன் ஒரு மடததில் அமர்ந்தார். இதனைக் கேள்வியுற்ற சமணர் பாண்டியன் ஒப்பம்பெற்று இரவில் மடத்திற்குத் தீ வைத்து விட்டனர். இதனையுணர்ந்த சம்பந்தர்

செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்யராம் அமணர் கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற்காகவே

என்னும் முதற் பாடலுடைய பதிகத்தினைத் தொடங்கி ஒவ்வொரு பாடலிலும் பாண்டியற்காகவே என்ற சொற்றொடரை மகுடமாக வைத்து

அப்பன் ஆலவா யாதி அருளினல்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே

என்ற திருக்கடைக்காப்புப் பாடலுடன் முடித்தார். உடனே கொடிய வெப்புநோய் மன்னனைப் பற்றிக்கொண்டது சமணர்

மந்திர தந்திரங்களால் வெப்புநோய் மிகுந்ததேயொழிய குறைந்த பாடில்லை. மங்கையர்க்கரசியார் வேண்டுகோளினல் சம்பந்தர் சென்று மந்திரமாவது நீறு என்று தொடங்கும் பதிகத்தை ஓதி மன்னன் உடம்பில் நீற்றைத்தடவி நோயினை நீக்கியருளினர். இப்பதிகத்தின் திருக்கடைக் காப்புப் பாடல் கீழ்வருமாறு :—

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே.

திருநாவுக்கரசருக்குச் சமணர் நஞ்சுகலந்த பாற்சோற்றினைக் கொடுத்தனர். இதனின்றும் தாம் உயிர் தப்பிய செய்தியை சொற்கோ கீழ்க் காட்டியுள்ள பாடலில தெரிவித்துள்ளார் :

துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதில்நாளு மரனடிக் கன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோ றுக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிகளாரே.

இவ்வாறே சமணர் தம்மை கல்லிற்கட்டி கடலில் வீழ்த்திய போது தாம் தப்பிப் பிழைத்த செய்தியை கீழ்வரும் பாடலில் தெரிவித்துள்ளார் :

கல்லி ளேடெனைப் பூட்டி யமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினல்
நெல்லு நீள்வயல் நீலக்குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே.

கட்டுரையாகலின் மூவர்களுடைய அரிய செயல்களைப் பற்றி மேலும் விரித்தெழுதாமல் இதனுடன் முடித்தாம்

இத்துணையும் யாம் எழுதியது தேவார திருவாசகமாகிய ஒப்பற்ற திப்பிய நூல்கள் நமக்கு எய்ப்பினில் வைப்பாக அமைந்துள்ளன என்பதனை வற்புறுத்தவே.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

இளங்கோ காணும் ஊழ்.

பேராசிரியர் கொண்டல் க. மகாதேவன், பி. எஸ்சி., எம். ஏ.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்.

ஒவ்வொரு செயலுக்கும் நேரான. எதிரான ஒரு செயல் விளையவே செய்யும் வினையின் பயனையே ஊழ் என்கின்றோம். 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்று இளங்கோவடிகள் கூறும்போது தனி மனிதன் தனது வினையின் விளைவிலிருந்து தப்ப முடியாது என்பதனையே வற்புறுத்துகின்றார், செய்த வினை பற்றி எவரும் கவலை கொள்ளாத ஒரு நிலை ஏற்பட்டு விட்டால் எண்ணித் துணிந்தே செயலாற்ற வேண்டும் என்ற இன்றியமையாமையும் இல்லாது போய் விடும். அம்மட்டோ? எதற்கும் எவரும் பொறுப்பேற்க வேண்டிய கடப்பாடும் இல்லையென்றாகி விடும். ஊழின் பயனை உணர்ந்து ஏற்பதே பண்புடைமை அத்தகைய பண்புடையார் உண்மையினாலேயே உலகம் ஒடுங்காமல் இன்றும் உயிர்த்து நிற்கின்றது. இன்றேல் எந்நாளோ திங்களின் மேற்பரப்பு போல் மண்புக்கு மாய்ந்து மணல்மேடிட்டுப் போயிருக்கும். இந்நிலையில் 'இளங்கோ தனது காப்பியத்தில் ஊழ்வினை என அச்சுறுத்துவதால் ஒழுக்கம் உண்டாகும் என்று கருதுகின்றார். ஊழை வெல்லலாம் என்றாலே ஒழுக்கம் உண்டாகும் இருந்தாலும் இளங்கோவடிகள் இதனைக் கூறவில்லை' என்று குறைபட்டுக் கொள்கிறவர்களையும் காண்கின்றோம்,

தனி மனிதனும் சமுதாயமும் :

மனிதனுக்கு இரு வகை வாழ்க்கை உண்டு. கருவாகி உருவாகி ஒன்பது மாத இறுதியில் பிறந்து வாழும் தனி மனித வாழ்க்கை ஒன்று இந்த ஒன்பது மாதத்தில் விரைந்து பெறும் மாற்ற நிலைகளை உலகத்தில் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து உயிர் இனம் மெல்ல மெல்லப் பெறுவதற்குத் தொண்ணூறு லட்சம் ஆண்டுகள் ஆயின என்ற அறிவியல் உண்மையினை நாம் நினைத்தும் பார்ப்பதில்லை! மனிதன் தனது குறுகிய வாழ்நாளில் செய்த வினையின் விளைவை அவனது வாழ் நாளிலேயே உழைத்து முயன்று உப்பக்கம் கண்டுவிட முடியும் என்பது இயலாத ஒன்றாகும் ஆனால் மனித சமுதாயம் தனது நீண்ட வாழ்க்கையிலே செய்த வினைகளின் பயன்களிலிருந்து அறிவைச் சென்ற இடத்திலே செல்லவிடாமல் விழிப்புடன் இருந்தால் மெல்ல மெல்ல நன்றின்பால் திரும்பி

ஒழுக்கம் பெற்று உயர்ந்து விடலாம். மாதவியின் மனை புகுந்து மனையகத்தை மறந்த கோவலன் பொருளிழந்து மீண்டும் பொருள் தேடும் புதிய முயற்சியில் உயிரையும் இழக்க வேண்டி யிருந்தது. காவிரிக் கரையில் அகப் போராட்டத்தில் காவா நாவினளாய் கானற்பாணி. பாடிவிட்ட மாதவி அதன் விளைவாகக் காதலனை இழந்து கண்ணகியின் திருவுருவத்தை அகத்திலே சுமந்து வாழ வேண்டி நேரிட்டது. கங்கைக் கரையிலே புறப் போராட்டத்திலே காவா நாவினராய் 'கல்யாண நலுங்கு' பாடிவிட்ட கனகவிசயரோ கண்ணகியின் திருவுருவத்தைப் புறத்திலே சுமந்து காப்பியத்திலே இடம் பெற்றுக வேண்டிய நெருக்கடிக்கு ஆளாக நேரிட்டது. தனி மனித வாழ்வில்,

"முற்பகல் செய்தான் பிறன் கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்"

என்று இளங்கோ எடுத்துக்காட்டுவதை யாரே மறுக்க முடியும்?

"பொன் செய் கொல்லன் தன்சொற்கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்"

எனக் கூறி மயங்கி வீழ்ந்து மடிந்த மன்னவனைக் காணும் நாம் தனி மனித வாழ்வில் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டியே தீரும் என்பதை உணரவே செய்கின்றோம். இருந்தாலும் தனி ஒரு மன்னன் தவறு செய்து அதன் விளைவை நேர்மையுடன் ஏற்று மடிந்த அந்தச் செய்தியை தமக்கும் ஒரு பாடமாகக் கொண்டு,

"மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்"

தெளிந்து ஊழாலும் வென்று வீழ்த்த முடியாத பாண்டியனின் பண்புடைமையினை.

"வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோலாக்கியது"

என்று உணர்ந்து உய்யும் அளவிற்கு மன்னர் சமுதாயம் உயர்ந்து விட்டதே. ஊழை வெல்லலாம் என்பதற்கு இதனினும் எழில் மிக்கதோர் எடுத்துக்காட்டு எங்குக் காண முடியும்?

ஊழை வென்ற மாதவி

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

என்னும் பொய்யா மொழிக்கு இலக்கியமாகத் தானே மாமலர் நெடுங்கண் மாதவி நல்லாளை இளங்கோவடிகளார் நமக்குப் படைத் தளித்துள்ளார்? இந்திரன் அவையில் சயந்தன்பால் உள்ளத்தை ஓடவிட்டுக் கலையரங்கைக் காதலரங்காக மாற்றி விட்ட வினையின் பயனாக வீணா மங்கலம் இழப்ப மண்ணில் வந்து தங்கிய ஊர்வசிப் பரம்பரையில் வந்தவளானாலும், தனது காதலனைக் கலையையும் காதலையும் குழப்பிக் கொண்டு,

"நகை யாடாயத்து நன்மொழி திளைத்துக்
குரல் வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரி தரு மரபிற் கோவலன் ....

என்று ஊரார் பேசும் நிலையை மாற்றி, அவனை 'கருணை மறவன்' என்றும் 'செல்லாச் செல்வ' என்றும், 'இல்லோர் செம்மல்' என்றும் அறவோர்களும் அழைக்கும் ஒரு நிலைக்கு உயர்த்தியதோடு தனது குலக்கொழுந்தாம் மணிமேகலையையும்,

கணிகையர் கோலம் காணாது ஒழிகென
கோதைத் தாமம் குழலொடு களைந்து

தவநெறிப்படுத்தித் தனிச் சிறப்பெய்தினாள். அம்மாதவி.

ஊழை வெல்ல முடியும் கொல்ல முடியாது

இளங்கோவின் சிலம்பில் இவ்வளவையும் காணும் நாம் 'ஊழைவெல்லலாம் என்றாலே ஒழுக்கம் உண்டாகும்: அதனை இளங்கோ கூறவில்லை' என்பார் கூற்றை எப்படி ஏற்க முடியும்? தன் வினை தன்னைச் சுடாமல் விடாது ஆனால் சமூகத்தின் வினை எதிர்காலத்து இளங் குருத்துக்களையும் தீய்க்காமல் இருக்கத் தனி மனிதன் ஒவ்வொருவனும் தாழாது உஞற்ற முன் வருதல் வேண்டும். ஆம், இளங்கோவின் மாதவி நல்லாள் ஊழையும் உப்பக்கம் கண்டு உயர்ந்தாள்; உலகத்தையும் உயர்த்தினாள். மற்றும், சிலர் கூறுவது போல் இளங்கோ ஊழ்வினையைக் காட்டி அச்சுறுத்தவில்லை: ஊழின் இயல்பினையே எடுத்துக் கூறுகிறார் ஊழை வெல்ல முடியாது என்று அவர் எங்கும் சொல்லவில்லை. அதனைக் கொல்ல முடியாது என்றே சொல்கின்றார். ஆம், செயலை எதிர்த்து நிற்கும் உராய் வாற்றல் போன்ற ஊழினை இல்லை என்று செய்துவிட முடியாது; முயன்று எண்ணெய் இட்டு நெகிழ்த்து அதன் ஆற்றலை வெல்ல முடியும் என்பதே நடைமுறையில் நாம் காணும் அறிவியலும் ஆகும்.

சென்ற இதழின் தொடர்ச்சி

தமிழ்நூற் குறியீட்டு விளக்கம்

பேராசிரியர் ச பாலசுந்தரம், கரந்தைப் புலவர் கல்லூரி

இனித் தமிழன் அல்லது தமிழம் என்றெருரு அரக்கன் வாழ்ந்தான் அல்லது அப்பெயருடைய ஒரு தேவன் வாழ்ந்தான் அவன் பெயரால் இந் நாட்டிற்குப் பெயர் அமைந்ததென்றும், ஒரு காலத்தில் காட்டுமராண்டிகளாய் விலங்குத் தன்மை வாய்ந்த கொடியவர்கள் அல்லது அரக்கர்கள் இங்கு வாழ்ந்தார்கள் அவர்களைத் தமிழகன் என்னும் தெய்வ ஆற்றல்பெற்ற ஒரு மாவீரன் வென்று மக்களைக் காத்தான் அல்லது குடியேற்றினன் அதனல் அவன் பெயரால் இந்நாட்டிற்குப் பெயரமைந்தது என்ருற் போலச் சிலர் புராணக் கற்பனை செய்யமுற்படினும் வியப்படைதற்கில்லை இத்தகைய கற்பனைகள் அறிஞர்களும் பிறநாட்டவர்களும் நம்மை எள்ளி நகைத்தற்கு ஏதுவாக அமையலாமேயன்றி உண்மை அறிந்துயரப் பயன் படா என்க.

மெய்ம்மையான காரணம் ?

தமிழகம் என்னும் இத்தொகை மொழியை இருபெயரொட்டுப் பண்புத் தொகையென்ப. ஆறன் தொகையாகக் கொண்டு விரிப்பின் தமிழர் என்பதன் ஈறு கெட்டதாகக் கொள்ளல் வேண்டும் எவ்வாருயினும் இந்த இரு சொற்களுள் தமிழ் என்பதே நாட்டின் பெயராகவும் அகம் என்பது இடத்தை உணர்த்தும் பொதுப் பெயராகவும் நிற்றல் வெளிப்படை இடப் பொருளில் வரும். நிலம், நாடு, தேயம் முதலிய சொற்களை விட்டு 'அகம்' என்னும் சொல்லை அமைத்து வழங்கியமைக்கும் ஒரு சிறப்பிருத்தல் வேண்டும் அகம் என்பது பொதுவாக இடம் என்னும் பொருள் பற்றி வருமேனும் சிறப்பாக வரையறையுடைய ஓர் எல்லைக்கு உட்பட்ட உள்ளிடத்தையே உணர்த்தும். அஃதாவது புறம் என்னும் சொற்பொருளுக்கு எதிர் மறையாய பொருளைச் சுட்டி நிற்பது இச்சொல்லின் முறைமையாம் எனவே இச்சொல்லும் ஈண்டைக்கு ஓர் இன்றியமையாத வரலாற்றுக் குறிப்பைத்தரும் ஆற்றலோடு அமைந்துள்ள தெனலாம் இதுபற்றிப் பின்னர்க் காண்போம். அடுத்துத் '' தமிழ் '' என்னும் சொல்லைப் பார்ப்போம்.

தமிழ் :— இஃது ஒரு சொல்லா? ஓர் உரிச்சொல்லடியாகப் பிறந்த ஒட்டுப் பெயர்ச் சொல்லா? என ஆய்தல் நலம் இதுகாறும் இதனை ஒரு சொல்லாக அஃதாவது பண்புப் பெயராக் கொண்டே அறிஞர்கள் விளக்கங் கூறி வந்துள்ளனர். ஆழ்ந்து நோக்கின் இப்பெயர்ச்சொல் இருவேறு மூல உரிச் சொற்களால் இணைந்து மருவி ஒரு சொல் நீர்மைத்தாய் நிற்பதை அறியலாம். இதனைப் பல பொருளொரு சொல்லாகக்கொண்டு. சாயல், மென்மை. இனிமை நீர்மை, மொழி எனப் பல பொருள் விரிப்பர். இப் பெயர்களை ஆகு பெயர் இலக்கணத்தைச் சார்த்தித் தமிழ்நாடு, தமிழ் மக்கள் தமிழ் மரபு. தமிழ் வீரம். தமிழ்ப் படை, தமிழ் நூல்கள் என்னும் பொருள் படவும், இருமடி. ஆகுபெயர் முறையில் தமிழ்க் காதல்—களவொழுக்கம் என்னும் பொருள் படவும் விரித்துரைப்பர் இலக்கியப் புலவர்கள் இப் பொருள்கள் யாவும் தமிழ் மொழியின் பண்பு — பயன் ஆயவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயல்லாமல் இயல்புப் பொருளல்லவென்பது தெளிவாம். இதனைப் பிறழ உணர்ந்து இனிமையும் நீர்மையும் சாயலும் உடைமையின் இம்மொழி தமிழ எனப் பெயர் பெறுவதாயிற்று என்றனர் எனவே நீர்மை முதலியவை காரணம் என்பதும் மொழி காரியம் என்பதும் அவர் தம் கருத்தாகின்றது. நீர்மை முதலாயவை இவ் அருமைத் தமிழ் மொழியின் பண்புகளேயன்றி காரணங்கள் அல்ல என்பதை யாவரும் அறிவர்.

இனி தமிழ் என்பது இரண்டு உரிச் சொற்களால் ஆயது எனின் அவற்றை எவ்வாறு பிரித்தறிவது? தமி + ழ் என்றோ தமி + இழ் என்றோ. தம் + இழ் என்றோ பிரித்தல் வேண்டும் தமி + ழ் எனப் பிரிப்பின் தமி என்பதைத் தனிமை என்னும் பொருளுடையதாகக் கொள்ளல் வேண்டும் உவ்வாறு கொள்ளின் எஞ்சிநிற்கும் 'ழ்' ஒரு சொல்லாக நின்று பொருள் தாற்கியலாது ழகரம் ஓர் ஒற்றெழுத்து ஒற்றெழுத்து ஒரு சொல்லின் கண் அமைந்து பொருள் வேறுபடுக்குமேயன்றித் தனித்து ஒரு சொல்லாக நின்று பிறிதொரு சொல்லோடியையாது: இவ் இடர்ப்பாடுகருதி ஒரு சாரார் தமி என்பது ழகரத்திற்கு அடையாக நின்று சிறப்பிக்கின்றதென்பர். அஃதாவது ழகரம் பிற மொழியில் இல்லை இச்சிறப்பெழுத்தைத் தென்மொழி (தமிழ்) ஒன்றே பெற்றிருக்கிறது ஆதலின் தமிழ் எனப் பெயர் பெற்றது எனக் கூறி மகிழ்வார் அவர்.

தமி + இழ் எனப் பிரிப்பின் புணருங்கால் தமியிழ் எனப் புணர்தல் வேண்டும் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் இகரமாகவே இருத்தலின் ஆடிக்குக் கொண்டான் என்பதைப் போல் ஓர் இகரம் கெட்டுப் புணர்ந்ததாகக் கொண்டு அவற்

றின் பொருளைப் பார்ப்போம். தமி + இழ் என்பவற்றுள் முன்னது தனிமை அல்லது சிறப்பு என்னும் பொருளைத் தரலாம். பின்னது இழ, இழி, இழு, இழை என்பவற்றிற்குரிய வேர்ப் பகுதியாகக் கொள்ளலாம் அங்ஙனம் கொள்ளின் அது வினைப்பகுதியாகலின் ஈண்டைக்குப் பொருந்தாது. இழுது என்னும் பெயர்ச் சொல்லின் ஈறு கெட்டதாகக் கொண்டு அமிழ் தம் என்னும் பொருள் தருவதாக வைத்துக்கொண்டால் சிறந்த அல்லது தனித்த அமிழ்தம் என்று பொருள் தருகின்றது தமிழ் தமிழ் தமிழ் எனப் பல்கால் அடுக்கிக் கூறின் 'அமிழ்து' என ஒலித்தலின் அமிழ்தம் போன்றது இம்மொழி ஆதலின் தமிழ் எனப் பெயர் பெற்றது எனக் கூறுவார்க்கு இஃது ஏற்புடையதாகலாம். இவ்வாறு கொள்ளின் மொழிப் பெயர் நாட்டிற்கமைந்ததாகச் செல்லுமேயன்றி நாட்டின் பெயராகக் கொள்வதற்குப் பொருந்தி வராது எனவே அடிப்படை முரணாக ஆகின்றது பின்னர் எவ்வாறு பிரிப்பது?

தம் + ஏழ் எனப் பிரித்தல் வேண்டும் இவ்வாறு பிரிப்பின் வரலாற்று முறையோடு பொருந்துவதைக் காணலாம். தம் + ஏழ் என்பன தனக்கு தமக்கு எனத் தனிக்குறில் முன் ஒற்று உயிர் வரின் இரட்டாமற் புணர்ந்தமை போலத் 'தமேழ்' எனப் புணர்ந்து ஒரு சொல் நீர்மை பெற்று மருவித் 'தமிழ்' என நின்றன வென்க. 'ஏழ்' என்பது இழ், ஈழ் எனத் திரிவது இயல்பேயாம். என்னை? எகர ஏகாரங்கள் இகர ஈகாரங்களின் கிளை யெழுத்துக்களாதலின் என்க. ஏழ் என்னும் இச்சொல் அகம் என்பதோடு கூடி 'ஏழகம்' என்றும் அகம் என்பதன் இடைக் குறையாகிய 'அம்' என்பதனோடு கூடி ஈழம் என்றும் நிற்கும் ஆகவே தம் + ஏழ் + அகம் என்பன (தம்மேழகம்) — தமேழகம் தமிழகம் என மருவி நிற்கின்றன என்பதையும் — தமி என்னும் முன்னொட்டுச் சேராதபோது ஏழகம் என நின்ற தொகைச் சொல்லே ஈழம் என மருவி நிற கின்றது என்பதையும் இனி ஆய்ந்து காணலாம்.

முதற்கண் இவ்விரு சொற்களின் (தம் + ஏழ்) பொருளமைதியைக் காண்போம். தம் + ஏழ் என்னும் இவற்றுள் 'தம்' என்பது. ஒத்த இனமாயதொரு பொருட் கூட்டத்துள் அவற்றினின்றும் தன்னைப் பிரித்துணர்தற்குரிய தனித் தன்மை பெற்றிருக்கும் ஒரு பொருளைச் சுட்டியுணர முன்னொட்டாக நிற்கும் ஓர் உரிச் சொல்லாகும். அஃதாவது சிறப்புத் தன்மையைச் சுட்டி வரும் இயல்பினதாம் 'தாம்' என்னும் படர்க்கைப் பன்மைப் பெயரின் குறுக்கமாகிய 'தம்' என்பது வேறு சொல் இது வேறு சொல். இச்சொல் (தம்) முறைப் பெயர்களோடு

கூடி வருமிடத்தல்லது பிறவற்றேடுவரின் இகர விகுதி பெற்று 'தமி' என்ற வடிவிலேயே பயின்று வரும்.

'தம்' என்பது சிறப்புக் குறித்து வருதலைக் கீழ்வரும் காட்டுகளால் அறியலாம். தந்தை என்னும் முறைப் பெயர் மூவிடங்களுக்கு உரியதாக வருங்கால் எந்தை — நுந்தை (உந்தை) தந்தை எனவரும் இவ்வாறன்றி என் தந்தை — உன் தந்தை அவன் தந்தை எனவும் வழங்குகின்றது ஏன்? எந்தை முதலிய இடஞ்சுட்டும் பெயர்களைப் பிரித்தால் என் + தை. நுன் (நின்) அல்லது உன் + தை, தன் + தை எனப்பிரியும். ஒரு வற்குத் தந்தை ஒருவராக அன்றிப் பலராதல் அமையாது. எனவே என். உன், தன் என்றே நிலை மொழியைப் பிரித்தல் வேண்டும் இன்றேல் தை என்னும் ஒருமைப் பெயரோடு எம் முதலாகிய பன்மை இடப்பெயர்கள் இயையா இவ்வாறே எம் மான் — நும்மான் — தம்மான் என்பனவும் எம்பின் — நும்பின் — தம்பின் என்பனவும், எம்மாள், எங்கை, எவ்வை. எம்முன் முதலிய முறைப் பெயர்கள் அமைந்துள [எந்தாய், நுந்தாய் எனவாரா வரின் அவை அன்னையைக் குறியாமல் அத்தனையே குறிக்கும் என்பதையும் யாய், ஞாய், தாய் என்பனவே தாய் பற்றிவரும் மூவிடப்பெயர்கள் என்பதையும் பிறமுறைப்பெயர் களைப்பற்றிய விளக்கமும் எனது முறைப்பெயர் ஆய்வுக் கட்டுரையில் காண்க] எனவே இடங்குறியாமல் வரும் தந்தை என்பது மூவிடத்திற்கும் பொதுவாய் இடங்குறியாது நிற்கும் சிறப்புடையதென்பதையும் அறியலாம். தந்தை என்னும் பெயர் தனிச்சிறப்புடைய பெயராகச் சான்றோர் வழங்கியமையாற்றான் ஆந்தை, பூந்தை; சாத்தந்தை முதலிய புணர் மொழிகளுக்கு தந்தை என்பதை வருமொழியாக வைத்து விதி கூறினர் தொல் காப்பியர் என்க. இம்முறைமையினாற்றான் எந்தந்தை உன் தந்தை அவன் தந்தை முதலிய வழக்குகள் பயின்று வருகின்றன என்க

எனவேஇடஞ்சுட்டாமல் மூவிடத்திற்கும்பொதுவாகநிற்கும் தந்தை என்னும் சொல்லுள் 'தம்(என்பது சிறப்புப்பொருள் பட நிற்றலை அறியலாம்.

இனி இடப்பெயராகவும் தந்தை என்பது தன் + தை எனப் பிரியுமெனின் புணருங்கால் 'தன்றை' என்றன்றே புணர்தல் வேண்டும் தந்தைஎனப் புணர்ந்தமை எவ்வாறென ஈண்டோர் ஐயம் எழும் முந்துமொழிந்தான் தலைதடுமாற்றம் முந்தை சிந்து, சிந்தடி என்பனவற்றுள் வரும் முந்து: சிந்து என்பவை முன் + து, சின் + து என்பவற்றின் புணர்சசி என்பதில் ஐயமில்லை அவை முந்து. சிந்து எனமருவிப் புணர்ந்து நின்றாற் போலவே தன் + தை முதலாயவை வருமொழித் தகரத்திற்கு

இனமாகிய நகரமாகத் திரிந்து மருவியதெனக் கொள்ளல் "வேண்டும் இந்நுட்பம் இலக்கண நூலார்க்கு விளக்க வேண்டிய கடப்பாடுடையதன்றாகலான் தநநு எ முதலாகிய முறைப்பெயர்கள் பிரிப்பப்பிரியா என ஆணையிட்டமைத்துக் கூறினார் என்க இனிப்பிறவற்றோடு வருமிடத்தும் இவ்வுரிச் சொல், அவர் தம்பொருள் சான்றோர் தம் சால்பு எனப் பெய ரோடும் யாம் தாம் செய்தேம், நீர் தாம் செய்தீர் அவர் தாம் செய்தார்எனவரும் வினையொடு முடியுங்கால் இடைச்சொல்லியல் பிற்றாய் நிற்கும் என்க.

எனவே தம் (தமி) என்பதற்குச் சிறப்பென்பதே பொரு ளாதல் தெளிவாம் இவ்வுரிச்சொல் தலைமை, தனிமை என்னும் பொருளைத்தருங்கால் சிறப்பென்னும் கருத்து வழியாகவே அமைந்துணர்த்தும். ஒருமையைச் சுட்டும் தனிமை என்னும் பொருள் இச்சொற்கு எவ்வாற்றானும் பொருந்தாதென்க. என்னை ஒருமையைச் சுட்டின் 'தன்' என்பது முதனிலையாத லன்றி பன்மையுணர்த்தும் 'தம்' முதனிலையாதல் இயையா தாதலின் என்க. "மிகநலம்பெற்றாள் தமியள் மூத்தற்று"— "தழைக்கின்ற உள்ளத்தன்னாள் முன்னொரு தமியன் சென்றான்" என வரும் சான்றோர் வழக்கினுள்ளும் முன்னது இழித்தற் கண்ணும் பின்னது உயர்த்தற்கண்ணும் சிறப்பே (தனித் தன்மை) குறித்துவந்துள்ளமையை நுணுகிக்காணலாம்.

இனி ஏழ் என்பதன்பொருளைக் காண்போம் இச்சொல் வறுமை, அறியாமை ஆகிய பண்புகளை உணர்த்தும் ஏழ்மை ஏழமை என்பவற்றுக்கும், ஏழை என்னும் பெண்பாலுணர்த்தும் பெயர்ச்சொல்லிற்கும் ஆறுக்கும் எட்டிற்கும் இடைப்பட்டதாகிய எண்ணினை உணர்த்தும் ஏழு என்னும் அளவைப்பெயர்ச் சொல்லிற்கும் முதனிலையாக நின்றுபொருள்தரும் உரிச்சொல் லாம். ஈண்டு முதனிலை அளவாகவே நிற்கும் எண்ணுப்பெயர் என்க. இவ்வுரிச்சொல்லின் அடிநிலை 'ஏழ்' என்பதாம் ('ஏழு என்னும் முதனிலை வினைச்சொல்லிற்கும் 'எழ்' என்பதே அடி யாகும் கணையமரத்தைக் குறிக்கும் எழுஎன்னும் பெயர்ச்சொல் லிற்கும் இதுவே அடியாகும்) இஃது 'ஏழு' என உகரச்சாரியை பெறலும் 'ஏழ்' எனச்சாரியை பெறாமலும் எண்ணுப்பொருளை உணர்த்தும், பத்து, நூறு, கடல் முதலாயசொற்களோடு புணருங்கால் 'எழு' என முதல் குறுகியும் வரும் [இவ்வெண்ணின் பெயர்க்காரணத்தை எண்ணுப்பெயர் ஆராய்ச்சியில் காணலாம்] ஏழ்ச்சிஎன்னும்சொல்வேறு. அஃது இகழ்ச்சிஎன்னும்சொல்லின் திரிபாகும்.

ஆகவே (தமி + ஏழ் + அகம்) தமிழகம் என்பது சிறப்பான ஏழு நிலப்பகுதி அல்லது நாடுகளைக் கொண்டதொரு நிலப் பரப்பைச் சுட்டிநிற்கும் பெயர் என்பது தெளிவாகின்றது.

(தொடரும்)

சிலப்பதிகார மீயியற்கைச் செய்திகள்.

(ஆபிரகாம் அருளப்பன்)
13, தானியேல் தாமசு தெரு, திருநெல்வேலி - 2.

இளங்கோ என்னும் நற்றமிழ்ப் புலவர் இயற்றிய முத்தமிழ்க் காப்பிய மாகிய சிலப்பதிகாரத்தில் வரலாற்று நிகழ்ச்சியென நம்பமுடியாத இயற்கை மீறிய செய்திகள் பல கூறப்பட்டுள்ளன அந்நூலில் அமைந்துள்ள கண்ணகி கோவலன் கதை, ஆசிரியர் காலத்திலேயே நடந்ததாக எண்ணுதற்குக் காட்சிக் காதையில், மலைவளங்காணச் சென்றிருந்த செங்குட்டுவனிடம் மலைவாழ் மக்கள்,

"கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை யிழந்து தனித்துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட்டாள்கொல் யார்மகள் கொல்லோ,"

என வியந்து கூறியபோது,

"தண்டமி ழாசான் சாத்தனிஃ துரைக்கும்
ஒண்டொடி மாதர்க் குற்றதை யெல்லாந்
திண்டிறல் வேந்தே செப்பக்கேளாய்"

என வரும் பகுதியும், வரந்தரு காதையில்,

"அந்தமி லின்பத் தரசாள் வேந்தென்று
என்றிற முரைத்த விமையோர் இளங்கொடி
தன்றிற முரைத்த தகைசால் நன்மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்."

என வரும் பகுதியும் மூல மாகின்றன.

ஆனால், இம்முறை, தம் காலத்திலேயே மெய்யாகக் கதை நிகழ்ந்ததெனக் காட்டுதற்கு ஆசிரியர் கையாண்ட உற்றுரைக்கும் உத்தியே எனக் கருதுதற்குக் கதைப் போக்கில் நாம் அறியும் இயற்கைக்கு மாறான பல செய்திகள் போதிய காரணமாகின்றன.

1. கனாத் திறமுரைத்த காதையில். மாலதியிடம், "செய்தவமில்லோர்க்குத் தெய்வம் வரங்கொடார்," எனக் கூறி. அவள் கையினின்று குழந்தைப் பிணத்தை வாங்கி விழுங்கியது இடாகினிப் பேய். பாசண்டச் சாத்தன் குழவி வடிவில் தோன்ற, அவனை மாலதி கொண்டாள். அவன் வளர்ந்து தேவந்தியை மணந்தான், என வருகிறது

2. காட்டில் கௌந்தி கண்ணகியரிட மிருந்து நீங்கி ஒரு பொய்கையை அடைந்த கோவலனுக்குக் கானுறை தெய்வ மொன்று வயந்தமாலை வடிவில் தோன்றி அவனை மயக்க முயன்ற போது அவன் மந்திர மோதி அவளை விலக்கினன்.

3. தவமறைந்தொழுகுவார், அலவற்பெண்டிர், அறைபோ கமைச்சர், பிறர் மனை நயப்போர், பொய்க்கரி யாளர், புறங் கூற்றாளர், இவரைத் தன் கைப்பாசத்தால் பிடித்துப் புடைத்து உண்ணும் பூதம் புகாரில் உண்டு. அதன் பாசத்துப் பட்ட பொய்க்கரியாளன் ஒருவனுடைய தாய் படுந் துயரங் கண்டு இரங்கிய கோவலன்,

"என்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென"

இரந்தான். பூதம் மறுமொழியாக,

"நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை,"

எனக் கூறிப் பொய்க் கரியாளனைப் புடைத்துக் கொன்றது.

4. வெட்டுண்டு வீழ்ந்து கிடந்த கோவலனைக் கண்டு,

"அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையா டன்கணவன்
தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்,
'எழுதெழில் மலருண்க ணிருந்தைக்க' வெனப்போனான்."

5. தன் கணவனைக் கொன்றமைக்கு நெடுஞ்செழியனிடம் வழக்குரைத்து வென்று, மதுரையை எரிப்பதற்கு வஞ்சினங் கூறி நின்ற கண்ணகி முன்னர்,

"பால்புரை வெள்ளெயிற்றுப் பார்ப்பனக் கோலத்து
மாலை யெரியங்கி வானவன் றான்றோன்றி,
'மாபத் தினிநின்னை மாணப் பிழைத்தநாள்
பாயெரி யிந்தப் பதியூட்டப் பண்டேயோர்
ஏவ லுடையேனால் யார்பிழைப் பாரீங்கு',"

என எரிப்பதற்குத் தக்க முறை வினவுகின்றான்.

6. பின்னர், மதுராபதி தெய்வம் கண்ணகியிடம் வந்து, கோவலனது முற்பிறப்புக் கதையும் பாண்டியரது நீதிச் சிறப்பு முதலியனவும் கூறுகிறாள்.

7. கண்ணகி, சேரர் மலைமிசை வேங்கை மரத்தடியில் நின்று,

"வானவர் போற்ற மன்னொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்,"

என அம்மலை வாழ் மக்கள் தாம் கண்ட செய்தியைச் செங்குட்டுவனுக்குக் கூறுகின்றனர்.

8. கண்ணகி பத்தினித் தெய்வமாகக் கோவில் வழிபாடு பெற்றதும் செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுத்து,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்தாயினுன் நானவன் தன்மகள்
வென்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னொடுந் தோழிமீ ரெல்லீரும் வம்மெல்லாம்,"

எனப் பேசுகின்றுள்.

"தேவந்திகைமேற் றிகழ்ந்து தோன்றி
'வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாணிழல் இருந்தோய் நின்னை',"

என வரும் இளங்கோவின் துறவு வரலாறும் பத்தினித் தெய்வம் கூறுகின்றுள்.

இவ்வாருக, மாலதி கையினின்று குழந்தைப் பிணத்தைப் பறித்து இடாகினிப் பேய் விழுங்கியதென்றும், பாசண்டச் சாத்தன் அவளது துயர் போக்கக் குழந்தையாகு னென்றும், அவன் வளர்ந்து தேவந்தியை மணந்து வாழ்ந்து பிரிந்தானென்றும், சதுக்கப் பூதம் பொய்க்கரியாளனைக் கோவலன் காண விழுங்கியதென்றும், அக்கினி தேவனும் மதுராபதியும் கண்ணகியிடம் பேசின ரென்றும், கோவலன் வானுலகு சென்றதைக் கண்ணகியும், கோவலன் தேவருடன் வந்து கண்ணகியை அந்நிலையே மேலுலகு கொண்டு சென்றதை வஞ்சிக் குறவரும் கண்டன ரென்றும், கண்ணகி பத்தினித் தெய்வமாகிப் பேசி வரம் அளித்தா ளென்றும், வருவன போன்ற செய்திகள் வாழ்க்கை வரலாற்று ஆராய்ச்சியாளர்க்கு உடம்பாடாகாதன என்பது யார்க்கும் புலனுவதே,

எனவே, சிலப்பதிகாரக் கதை அதன் ஆசிரியராகிய இளங்கோவடிகள் காலத்தில் நடந்த உண்மை நிகழ்ச்சியென நம்புதற்கு இடமில்லை.

தமிழ்ப் பொழில் துணர் 48, மலர் 2, ஆனந்த, வைகாசி இதழில். ''சிலம்புச் செல்வம்,'' என்ற தலைப்பில் திரு பி சோ. பாண்டியன் அறிவுடைநம்பி ஐயங்கள் தெரிவித்திருப்பது போல, வாழ்வில் நிகழக்கூடிய செய்திகளுள்ளும்,

''பொற்றொழிற் கொல்ல ரீரைஞ் நூற்றுவர்''

திருமாபத்திரிக்கு உயிர்ப்பலி யூட்டப்பட்டனர் என்பது போன்றவை மெய்ம்மையாக நிகழ்ந்தனவா, எனச்சிந்தித்து ஆராய்தல் தக்கதே,

தெய்வங்களை அமைதிப்படுத்துவதற்கென இளங்கோவடிகளின் காலத்தின் முன்னரோ, அந்நாட்களிலோ மக்கள் உயிர்ப்பலி யூட்டப்பட்டாரென வேறு செய்தி யொன்றும் அறியப்படவில்லை. தெய்வ வழிபாடாக மறியறுத்தல் முதலியன நடந்த குறிப்புக்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களில் காணப்படுகின்றன. இத்தகையவற்றைத் திருவள்ளுவர்,

''அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று'' — (259)

''தன்னுயிர் தீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை,'' — (327)

என அறிவுறுத்தி விலக்குகிறார்.

மற்று, மக்களுயிர்ப்பலி, அக்காலத்தில் தமிழ் நாட்டில் எவ்வரசரும் யாதொரு முறையிலும் நிகழ்த்தியதாகத் தெரியவில்லை.

எனவே, திரு. பாண்டியன் அறிவுடைநம்பி, ''ஒரு தீங்கு மறியாத ஆயிரம் பொற்கொல்லரைக் கொன்ற கொடுமை,'' என எண்ணி வருந்துவது போல யாருங் கவலைகொள்வதற்கு ஏதுவாகும் இச்செய்தி ஏதோ கதைக்குக் கதையாகத் தக்கனவோ. மற்றோர் கொண்ட கற்பனைச் செய்தியே என்பதில் எனக்கு ஐயமேயில்லை.

''ஊனுண் டுறமின் உயிர்க்கொலை நீங்குமின். —30-189
... ...
அறமனை காமி னல்லவை கடிமின், — 30-196

என நூலுக்கு நிறைவுரை கூறுகின்ற இளங்கோவடிகள் இங்ஙனமுங் கற்பனை காண்பாரென நம்புந்துணிவு எனக்கில்லை.

சிலப்பதிகார மூலமும் உரையும், டாக்டர் வே. சாமிநாதையரவர்கள் ஏழாம் பதிப்பு (1960) பக்கம் 490 அடிக்குறிப்பில் "[ ] இந்த அடையாளத்துக்குட்பட்ட பகுதிகள் சில பிரதிகளில் இல்லை," எனத் தந்துள்ளார். அப்பகுதிகள் அழற்படு காதை 16-33, 37-50, 67-87, 89-96, ஆயவை. இவ்வடிகளிலுள்ள சொற்களுக்கு அரும்பதவுரை காணப்படவில்லை.

அரங்கேற்று காதை, 106-7 ... ... தொழுதன ரேத்தப்பூதரை யெழுதி மேனிலை வைத்து, என்பதற்கு அடியார்க்கு நல்லார் உரை கூறிப்பின்னர், "இப்பூதம் நான்கின் உண்டியும், அணியும், ஆடையும், மாலையும், சாந்தமும், பொழுதும், செயலுமுதலிய வெல்லாம் அழற்படு காதைக்கண்ணே விரித்துக் கூறுதும்," என்கிறார்.

"இவ்விரண்டு உரையுள் அரும்பதவுரையே முந்தியதெனத் தெரிகிறது," என்று வே. சாமிநாதையர். ஏழாம் பதிப்பிலுள்ள மூன்றும் பதிப்பின் முகவுரையில் பகர்ந்திருக்கின்றார்.

ஆதலின், அழற்படு காதையிலுள்ள இடைச்செருகல், அடியார்க்கு நல்லாரது கைத்திறன், என எண்ணுதற்கு இடமேற்படுகின்றது இத்தகையதோர் இடைச்செருகலே

"பொற்றொழிற் கொல்ல ரீரைஞ் ஞூற்றுவ
ரொருமுலை குறைத்த திருமா பத்தினிக்
கொருபக லெல்லை யுயிர்ப்பலி யூட்டி,"

என்ற பகுதியும் என்பது என் எண்ணமாகும் ஈரைஞ்ஞூற்றுவர் - ஆயிரவர், என அரும்பதவுரையாசிரியர் குறிப்பு காணப்படுதலின், இவ்வஞ்சச் செயல் அவரோ அவர்க்கு முன்னை உரையாளரோ நுழைத்ததாகலாம்.

பிறவுஞ் சிந்திப்போம்.

கையறவு.

நம் இந்திய நாட்டின் முன்னாள் குடியரசு தலைவரும் உலகப் புகழ்பெற்ற, இந்தியத் தத்துவப் பேராசிரியருள் தலைசிறந்து விளங்கியவருமாகிய டாக்டர் திரு. இராதாகிருட்டினன் அவர்கள் 17—4—75 இரவு தம் பூதவுடலை நீத்துப் புகழுடம் பெய்திய செய்தி அறிந்து மிக வருந்துகிறோம். அன்னாரின் இழப்பு நாட்டிற்கு ஒரு பேரிழப்பாகும், அவர் தம் இன்னுயிர் இறைவன் திருவடிகளில் இன்பெய்தி அமைதி பெறுவதாக.

ஆசிரியர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை ஆசிரியர் பத்தாவது கருத்தரங்கு,

மணிமேகலைக் கருத்தகம் – 2

அண்ணாமலை நகர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையின் சார்பில் ஆசிரியர் பத்தாவது கருத்தரங்கு மார்ச்சு 8, 9 ஆகிய இரு நாட்களிலும் அண்ணாமலை நகரில் சிறப்புற நடைபெற்றது. முன்பு நடந்த ஒன்பதாவது கருத்தரங்கும், இக்கருத்தரங்கும் மணிமேகலைக் காப்பியம் பற்றியனவே.

பல்கலைக் கழகப் பலதுறை மாணவர்களும் பல்துறையாசிரியர்களும் இவ்வரங்கில் திரளாகக் கலந்து கொண்டனர். பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் தம் வரவேற்புரையில், தமிழ்த்துறை தொடர்ந்து நடத்திவரும் இவ்வரங்குகளில் இது காறும் ஏறத்தாழ 170 ஆய்வுக்கட்டுரைகள் படிக்கப்பெற்றன எனவும், இவற்றுள் சில நூல்களாகவும் வெளிவந்துள்ளன எனவும் பிற ஆய்வாளர்கள் மேற்கோள் காட்டும் அளவிற்கு இக்கட்டுரைகளின் தரம் உயர்ந்தன எனவும் எடுத்துக்கூறினர்.

பல்கலைக் கழக வேதியற் பேராசிரியர், அறிவியற்புல முதன்மையர் டாக்டர் வி பாலையா கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து அறிவியலாயினும், கலையியலாயினும் பண்பாட்டை வளர்ப்பதே நோக்கம் எனவும், காப்பியங்கள் நிகழ்ந்தனவா நிகழாதனவா எனப்பாராது புலவன் நோக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும் எனவும் கருத்தரங்குகள் தொடர்ந்து நடைபெறுவதால் அறிவு வளர்ச்சி பெருகுகின்றது எனவும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சிறந்த தமிழ் இலக்கியங்கள் எனப்பாராட்டியும் பேசினர்.

மணிமேகலைக் கருத்தரங்கின் முதற்பகுதி 8—3—75 பிற்பகல் துணைப்பேராசிரியர் டாக்டர் மு. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது மணிமேகலைப் பதிப்பு என்ற கட்டுரையில் திரு ச மெய்யப்பன் மணிமேகலைப் பதிப்பைத் தமிழுலகுக்கு அளித்தவர் டாக்டர் உ. வே. சா எனவும் அவர்தம் பதிப்புக்களை மூன்று பகுதிகளாக வகைப்படுத்தலாம் எனவும் ஆராய்ச்சிக்கு வேண்டிய குறிப்புக்கள் அனைத்தும் இவர்தம் பதிப்பில் உள எனவும் உ. வே. சா பதிப்பில் நேர்மையும் தனியமைப்பும் ஒழுங்கும உடையது எனவும் பதிப்பின் அருமையை எடுத்துக் காட்டினர். திரு. அ. ஆனந்தநடராசன் முப்பொருள் என்ற தலைப்பில் அறம் பொருள் இன்பங்களோடு வீடும் எடுத்துக் கூறப்பட்டிருப்பதைக் காட்டினர். திரு. சுப. கோவிந்தராசன்

ஆதிரை பிச்சை என்ற கட்டுரையில் சிலப்பதிகாரம் போலகற்பின் சிறப்பை எடுத்துக் காட்டுவதற்கு இவ்விடைக் காதையைச் சாத்தனுர் அமைத்துக் கொண்டார் என மொழிந்தார். திரு. கதி. தியாகராசன் உதயகுமரன் என்ற தம் ஆய்வுரையில் முற்பிறப்பின் தொடர்பு காரணமாகவே மணிமேகலையிடம் உதயகுமரன் காதல் கொண்டான் எனவும் அவன் தலைமைப் பாத்திரமாகக் கொள்வதற்கு உரிய தகுதிகளை இழந்து நிற்பதைச் சாத்தனுர் காட்டுகின்ருர், எனவும் புகன்றனர்.

9—3—75 முற்பகல் கருத்தரங்கு காலை 9-30 மணிக்குத் தொடங்கியது. இந்திய மொழிப்புல முதன்மையர், தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் தலைமை வகித்தார். திரு சி. சோமசுந்தரம் தன்னல மறுப்பு என்ற உரையில் மணிமேகலையின் வாழ்க்கையில் தன்னலம் சிறிதும் இல்லை எனவும் காமம் பற்றிய இடையூறுகளையெல்லாம் கடந்து பல்வகை சமயத் தொண்டுகள் ஆற்றியவள் என்றும் விரித்துக கூறினர். திரு பி கே, சார்ச்சு ஓர் அரசநீதி என்ற பொருளில் கற்பினைக் காக்க வேண்டுவது அரசனின் கடமை உதயகுமரன் அரசன் மகனுக இருந்தும் நீதி தவறினுன் என்று சான்று காட்டியும் பேசினர். அணியிலக்கணம் என்ற பொருளில் திரு. செ. வேங்கடராமச் செட்டியார தன்மை அணியும் காட்சி அணியும் ஓரீஇக் கூறிய உவமையும் இக்காப்பியத்தில் நிரம்ப வந்திருப்பதை விரித்துரைத்தார் தருக்க சாத்திரக் கருத்துக்கள என்ற தலைப்பில் திரு பி சீ. இராமாநுசாச்சாரி அருத்தாபத்திக்கு சாத்தனுர் சொல்லிய எடுத்துக்காட்டு பொருந்துமா என்று வடமொழி தருக்க நூலோடு ஆய்ந்து கூறினர். மணிபல்லவத் துயர் என்ற தலைப்பில் திரு. மு. தம்பிராசா இக்காதையில் வேறு பொருள்கள் பேசப்படினும் கோவலனுகிய தந்தையின் நினைவே பெருந்துயரத்திற்குக் காரணமாயிற்று என்று காட்டினுர் திரு செ சந்திரசேகரன் சக்கரவாளக் கோட்டம் என்ற ஆய்வுரையில் மணிமேகலைக்குத் துறவு எண்ணத்தை வளர்க்கும் நோக்கத்தோடு நிலையாமை பற்றிய நிகழ்ச்சிகளை இக்கோட்டம் காட்டுகின்றது என்று உரைத்தனர். அரசர் செய்திகள் என்ற தலைப்பில் திரு. சுப இராமநாதன் பெரும்பாணுற்றுப்படைக் கூறும் இளந்திரையனும் மணிமேகலை கூறும் பீலிவளையின் மகனும் ஒருவர் அல்லர் என்றும் புகார் பற்றிய குறிப்புக்கள் இரு நூலிலும் முரணுகக் காணப்படுகின்றன என்றும் ஆராய்ந்தனர். ஆபுத்திரன் என்ற தலைப்பில் திரு. வெ. செயராமன் பௌத்த மதத்தைப் பரப்புவதும் வைதிக மதத்தை எதிர்ப்பதும் இப்பாத்திரப் படைப்பின் பயன் என்று கூறினர்.

9—3—75 பிற்பகல் கருத்தரங்கு துணைப் பேராசிரியர் திரு க. வெள்ளைவாரணம் தலைமையில் நடைபெற்றது. மாதவி என்ற தலைப்பில் திரு ஆ ரா இந்திரா கலைத்தேர்ச்சி வாழ்க்கையில் ஏமாற்றம் மகளை நல்வழிப்படுத்தல் முதலான மாதவியின் குணங்களை விரித்துக் கூறினர். திரு அழ, பழநியப்பன் காப்பிய நோக்கு என்னும் பொருளில் முற்பிறப்புக் கதைகளின் வாயிலாக வினைப்பயனுக்கு ஏற்ற தண்டனைகளை பெற்றே தீர வேண்டும் என்று காப்பியம் காட்டுவதை எடுத்துரைத்தார். திரு. க. இராமச்சந்திரன் இந்திரவிழா என்ற தலைப்பில் நாட்டிற்கு இன்றியமையாதது மழை ஆதலின் அதற்குரிய கடவுளாகிய இந்திரனுக்கு விழா பண்டு கொண்டாடப்பட்டது என்றனர். அறவணவடிகள் என்ற தலைப்பில் திரு உ. பழநி இக்காப்பியத்தில் வரும் பாத்திரங்களையெல்லாம் உருவாக்குபவர் இவ்வடிகளார் என எடுத்துரைத்தார். தலைமைப் பாத்திரம் என்ற தலைப்பில் திரு சோம, இளவரசு பௌத்த மதத்தைப் பரப்புவதற்காகவே மணிமேகலை துறவியாக்கப்பட்டாள் எனவும் அவள் இளம்பருவ எண்ணங்கள் மேலோங்கி நிற்கின்றன எனவும் சொல்லினர் திரு நா இராமலிங்கம் துறவு என்ற தலைப்பில் ஆடவரேயன்றிப் பரத்தையர் குலத்துப் பிறந்த இளம் பெண்ணும் இல்லறம் துறந்து 'பௌத்தம் சாரலாம் என்று உரைத்தனர்.

டாக்டர் வ. சுப மாணிக்கம் மொழியியல் என்ற தலைப்பில் இக்காப்பியத்தில் சமயப் பகுதிகளில் பிறமொழிக் கலப்பு மிகுதியும் இருப்பினும் ஒலி வரம்பு தமிழுக்கு உட்பட்டது எனவும் சமயச் சொற்கள் பல தமிழாக்கம் பெற்றுள்ளன எனவும் சகரச்சொல் சைகாரச்சொல் கள்ளீறு, ஆநின்று, கின்று கிறு என்ற இடை நிலைகள் இந்த, அந்த உம், என்ற சொற்கள் இவைகள் சிலப்பதிகாரத்தோடு ஒற்றுமை உடையனவாகக் காணப்படுகின்றன எனவும் மொழி நிலையால் இவ்விரு காப்பியங்களும் கி பி மூன்றும் நூற்றுண்டில் ஒன்ருய்த் தோன்றியிருக்க வேண்டும் எனவும் சான்றுகளோடு காட்டினர்

பின்னுரையாக இராணி சீதையாச்சி உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. கிருட்டிணன மாணவர்கள் வினுக் கேட்பதைப் பாராட்டிப் பேசினர். தமிழ் வடமொழி நிறுவன இயக்குநர் திரு. மு. அருணுசலம் இதுவரை இவ்வரங்கில் 170 கட்டுரைகள் படித்திருப்பதைப் பாராட்டி இவைபோல் தொடர்ந்து புராணங்களையும் சிறப்பாகக் கல்வெட்டுக்களையும் துறை துறையாக ஆராய வேண்டும் எனவும் கூறினர். திரு. செ, வைத்தியலிங்கம் நன்றி கூறினர்.